**செ.வெ.எண்: 01** **நாள்: 02.01.2017**

## பத்திரிகைச் செய்தி

தற்பொழுது நடைமுறையில் உள்ள குடும்ப அட்டைகளின் புழங்கு காலத்தை 01.01.2017 முதல் 31.12.2017 வரை மேலும் ஓராண்டிற்கு நீட்டித்து தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன்படி, புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குடும்ப அட்டைகளை புதுப்பிக்கும் பணி நியாய விலை கடைகளில் 01.01.2017 முதல் நடைபெற்று வருகிறது. மேலும் 01.01.2017 முதல் அனைத்து வேலை நாட்களிலும், பணி நேரத்தில் உள்தாள்கள் வழங்கப்படும்.

எனவே, குடும்பத்தலைவர் அல்லது வயது வந்த குடும்ப உறுப்பினர்களில் ஒருவர், நியாயவிலைக் கடைக்கு தங்களது குடும்ப அட்டையை எடுத்துச் சென்று, நியாயவிலைக் கடையில் 2017ஆம் ஆண்டிற்கான உள்தாளை இணைத்து பெற்றுக் கொண்டு, நியாயவிலைக் கடையில் பராமரிக்கப்படும் 2017ஆம் ஆண்டுக்கான வழங்கல் பதிவேட்டில் 2017 ஆம் ஆண்டிற்கான உள்தாளை பெற்றுக் கொண்டேன் என்ற ரப்பர் முத்திரையிடப்படும். இடத்தில் நியாயவிலை கடைக்கு வருகை தந்துள்ள குடும்பத்தலைவர் / குடும்ப உறுப்பினர் கையொப்பமிடவோ / இடது கை பெருவிரல் ரேகை பதிக்கவோ கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு கையொப்பமிட்டால் அல்லது கைரேகை பதித்தால் மட்டுமே குடும்ப அட்டை புதுப்பித்தல் பணி முடிவுற்றதாக கருதப்படும். ஆதலால், தங்களுடைய குடும்ப அட்டையை 2017 ஆம் ஆண்டிற்கு புதுப்பித்துக் கொள்வதுடன், குடும்ப அட்டை புதுப்பித்தல் பணி செம்மையாக நடைபெற ஒத்துழைப்பு நல்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், கூட்ட நெரிசலை தவிர்க்கும் பொருட்டு, சுழற்சி முறையில் (Staggering System) ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான குடும்ப அட்டைகளை புதுப்பிக்க நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த விவரங்களை அந்தந்த நியாயவிலைக் கடைகளில் தெளிவான முறையில் விளம்பரப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் குறிப்பிட்ட நாளில் உள்தாளை பெறாத குடும்ப அட்டைதாரர்களுக்கு பொதுநாளான சனிக்கிழமை அன்று உள்தாள் வழங்கப்படும். ஆகவே தங்களுக்குரிய நாளில் நியாய விலைக் கடைகளுக்கு சென்று குடும்ப அட்டைகளை 2017 ஆம் ஆண்டிற்கு புதுப்பித்துக் கொள்ள வேண்டும்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**